மேலும் 60% மதிப்பெண்களுக்கு மேல் பெற்றவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பெயர்ப் பதிவு செய்ய வேண்டிய கடைசி நாள் : 20.07.18

பதிவுக்கட்டணம் : ரூ. 25

**துறைத் தலைவர் கவனத்திற்கு**

ஜுலை 4-ஆம் வாரத்திற்குள் தங்கள் கல்லூரியிலிருந்து எத்தனை மாணாக்கர் பங்கு பெறுவர் என்ற பட்டியலை (அவர்தம் முழுப்பெயர் முன்னெழுத்துடன், படிக்கும் ஆண்டு, துறை ஆகியவற்றுடன்) கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**முனைவர் ம. மேபல் எடல்குயின்**
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதி)
திருச்சிலுவை கல்லூரி,
நாகர்கோவில் - 629 004.

வள்ளுவன் வாக்கு வையத்தை

வாழ வைக்கும் வாக்கு!

ஒருங்கிணைப்பாளர்
ம. ஜாஸ்மின் வினோஜா
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை (சுயநிதி)
திருச்சிலுவை கல்லூரி,
நாகர்கோவில் - 629 004
தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள் : 9487055047, 9940814191

நிதி நல்கை
முனைவர் வி. ஜெபமாலை ஆராச்சி
(Former Principal Advisor to the Director General of Unido, Vienna, Austria.
முனைவர் வி. ஹெர்மனா ஜில்ட் ஆராச்சி
திரு. ச. விஜயகுமார் ஆராச்சி
(Proprietor, Cure Tech Civil Services, Chennai)

# திருச்சிலுவை கல்லூரி

## (தன்னாட்சி)

(Accredited with “A” Grade by NAAC - CGPAS 3.34)

**நாகர்கோவில் - 629 004.**

**தமிழ்த்துறை (சுயநிதி)**

நடத்தும்

## கன்னியாகுமரி வினாஞ்சி ஆராச்சி - வியாகுல மரியாள் அறக்கட்டளையின் அனைத்துக் கல்லூரி திருக்குறள் போட்டி

# அறிவிப்பும் அழைப்பும்

**போட்டி நடைபெறும் நாள்**

**09.08.2018**

**இடம்**

**வளனார் அரங்கம்**

**திருச்சிலுவை கல்லூரி**

**மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுக்கு,**

**வணக்கம்**

எம் கல்லூரியில் 2011-12ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்ட தமிழ்த்துறை சுயநிதிப் பிரிவு, மாணாக்கரின் கல்விப்புலம், பொது அறிவு, இலக்கியப் பரப்பு விரிந்திட, வளர்ந்திட வேறுபட்ட களங்களை அமைத்துச் செயல்பட்டு வருகின்றது. 2016-2017-ம் கல்வி ஆண்டு முதல் தமிழ்த்திருமறையும் உலகப் பொதுமறையுமான திருக்குறளை மாணாக்கர் பொருளறிந்து கற்று, சிந்தையில் தெளிவும் வாழ்வில் நேர்மையும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டும் என்ற நோக்கில் புதிய பார்வையில் ஆண்டுதோறும் அனைத்துக் கல்லூரி மாணாக்கருக்கான திருக்குறள் போட்டியை நடத்தி வருகின்றது.

**போட்டியின் நோக்கங்கள்**

1. கற்கும் குறளை எந்நாளும் நினைவில் நிறுத்தல் மேலும்மேலும் கற்கும் ஆவலை வளர்த்தல் பிறரையும் கற்கத் தூண்டுதல்
2. குறட்பாக்களைப் பொருளறிந்து கற்று, சிந்தையில் பதிவு செய்தல்.
3. வாழ்வின் எச்சூழலிலும் வழிகாட்டிஇ தீர்வு தரும் வகையில் குறட்கருத்துக்களைக் கற்கும் பழக்கத்தை உருவாக்குதல்.

**போட்டியின் பங்கேற்பாளர்கள்**

இத்திருக்குறள் போட்டியில் அனைத்துத் துறையைச் சார்ந்த (பிரெஞ்சு உட்பட) இளநிலை, முதுநிலை, இளநிலை ஆய்வாளர் அனைவரும் பங்கு பெறலாம். போட்டி பொதுவானது. ஒரு கல்லூரியிலிருந்து எத்தனைபேர் வேண்டுமானாலும பங்கேற்கலாம்.

**போட்டிக்குக் கற்க வேண்டிய அதிகாரங்கள்**

1. அறத்துப்பால்: 21 முதல் 29 அதிகாரங்கள் வரை (தீவினை அச்சம் - கள்ளாமை)
2. பொருட்பால் : 79 முதல் 93 அதிகாரங்கள் வரை (நட்பு - கள் உண்ணாமை)
3. இன்பத்துப்பால் : 117 முதல் 125 அதிகாரங்கள் வரை (படர் மெலிந்து இரங்கல் - நெஞ்சோடு கிளத்தல்)

**இருவேறு போட்டிகளும் பரிசுகளும்**

1. எழுத்துப் போட்டி
2. வாய்மொழிப் போட்டி

எழுத்துப் போட்டியானது காலை 9.30 மணிக்கு நடைபெறும். போட்டியில் முதல் 10 இடங்களைப் பிடித்த போட்டியாளர்கள் இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற்றவராவர். தொடர்ந்து வாய்மொழிப் போட்டி நடைபெறும். போட்டியில் வாகை சூடியவர்களுக்குப் பரிசுத் தொகை, நினைவுப்பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பரிசுகளின் விவரம்

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | - | ரூ. 1500 |
| இரண்டாம் பரிசு | - | ரூ. 1000 |
| மூன்றாம் பரிசு | - | ரூ. 750 |
| ஆறுதல் பரிசு | - | ரூ. 250 (இருவருக்கு) |